# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.04.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மோட்டார் வாகனம்
# (திருத்தம்)

***(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 28.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, பாரமற்ற வாகனமொன்றை அல்லது பாரமான வாகனமொன்றை ஓட்டுவதற்கான சட்டமுறையான வயதை அடைவதன்மேல் மாத்திரமே, அத்தகைய வாகனத்தை வீதியொன்றின்மீது ஓட்டுவதற்கு ஆளொருவரின்மீது கடமையொன்றைச் சுமத்துவதும், அவ்வேற்பாடுகளின் மீறுகைக்காகக் குற்றப்பணம் ஒன்றை விதிப்பதும், அத்துடன் சாரதி உரிமமில்லாது வாகனமொன்றை ஓட்டுவதற்கான குற்றப்பணங்களை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 141அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவு, மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டுவதற்கான தண்டமொன்றை விதிப்பதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 148அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவு, புகையிரதப் பாதையைக் கடந்து செல்கையிலான முற்காப்புகளுக்கு ஏற்பாடு செய்வதும் அத்துடன் அப்பிரிவின் மீறுகைக்காக தண்டம் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 152அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவு, ஓட்டும்போது செல்லிடத் தொலைபேசி முதலியவற்றின் பயன்பாட்டைத் தடைசெய்வதற்கு ஏற்பாடு செய்வதும் அத்துடன் அப்பிரிவின் மீறுகைக்காக தண்டம் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 196 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வெளியேற்றல் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழ் தொடர்பிலான ஏற்பாடுகளை மீறுவதற்காக 224 ஆம் பிரிவின்கீழான பொதுவான தண்டம் ஏற்புடையற்பாலதாதல் வேண்டுமென ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 216 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மதுசாரத்தை அல்லது போதைப் பொருட்களை உட்கொண்டபின்னர் மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதற்காக விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 216அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மதுசாரத்தை அல்லது போதைப் பொருட்களை உட்கொண்டபின்னர், கட்டணமொன்றுக்காக ஆட்களை ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதற்காக விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 216ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மதுசாரத்தை அல்லது போதைப் பொருட்களை உட்கொண்டபின்னர், மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதன்மூலம் ஆளொருவருக்கு மரணத்தை விளைவிப்பதற்கான குற்றப்பணத்தை அதிகரிப்பதும், தவறின் நோக்கெல்லையை மேலும் ஒழுங்குபடுத்துவதும், மதுசாரத்தை அல்லது போதைப்பொருட்களை உட்கொண்டபின்னர் மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதன்மூலம் ஆளொருவருக்கு காயம் அல்லது பாரதூரமான ஊறு விளைவிப்பதற்கான தண்டத்துக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 10 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 217 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அசட்டைத்தனமாக அல்லது அபாயகரமாக ஓட்டுவதற்காக விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதாகும்.*

***வாசகம் 11 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 218 ஆம் பிரிவை நீக்கிவிட்டு, காப்புறுதிச் சான்றிதழின்றி ஓட்டுவதற்கான தண்டத்துடன் அதனை மாற்றீடு செய்கின்றது.*

***வாசகம் 12 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பொதுவான தண்டத்திற்கு அவசியமான மாற்றத்தை செய்வதாகும்.*

***வாசகம் 13 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்து வதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 141அ மற்றும் 152அ என்னும் பிரிவுகள் தொடர்பில் உடனடியான குற்றப்பணங்களை விதித்துரைப்பதற்கு அமைச்சரை இயலச் செய்விப்பதாகும்.*

ச. வ.- ஓ. 53/2017

## (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*203 ஆம் அத்தியாயத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் முடிவில் காணப்படுகின்ற "அத்துடன்", என்னும் சொல்லை அழித்துவிடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், அப்பந்தியின் முடிவில் "அத்துடன்", என்னும் சொல்லை உட்புகுத்துவதன்மூலமும்;

(இ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) ஆளெவரும், அவர் பதினெட்டு வயதைப் பூர்த்திசெய்திருந்தாலொழிய, வீதியொன்றில் பாரமற்ற வாகனமொன்றை ஓட்டுதலாகாது என்பதுடன், அவர் இருபத்தொரு வயதைப் பூர்த்தி செய்திருந்தாலொழிய, வீதியொன்றில் பாரமான வாகனமொன்றை ஓட்டுதலாகாது.".

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், ‘‘மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும்’’ என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

‘‘இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.”;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், ‘‘நான்காயிரம் ரூபாவுக்குக் குறையாததும்’’ என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

‘‘இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.”;

*(இ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து அதன் (இ) என்னும் பந்தியாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-*

*"(இ) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல், நாற்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 141அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 141அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-*

*"மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டுவதற்கான தண்டம்.*

*141அ. (1) பிரிவுகள் 140 மற்றும் 141 என்பவற்றின் ஏற்பாடுகளை அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்:-*

*(அ) வேகமானது விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் இருபது நூற்றுவீதம் வரை விஞ்சியதாக இருக்கின்றவிடத்து, மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும்;*

(ஆ) வேகமானது விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் இருபது நூற்றுவீதத்தை விஞ்சியும் முப்பது நூற்றுவீதத்துக்குக் குறைவாகவும் இருக்கின்றவிடத்து, ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும்;

(இ) வேகமானது விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் முப்பது நூற்றுவீதத்தை விஞ்சியும் ஐம்பது நூற்றுவீதத்துக்குக் குறைவாகவும் இருக்கின்றவிடத்து, பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும்; அத்துடன்

(ஈ) வேகமானது விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் ஐம்பது நூற்றுவீதத்தை விஞ்சியுள்ளவிடத்து, பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும்;

ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 140 ஆம் மற்றும் 141 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், 215அ என்னும் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான உடனடியான குற்றப்பணங்களுக்கும் ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 148அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 148 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 148அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"*புகையிரதப் பாதையைக் கடந்து செல்கையிலான முற்காப்புகள்.*

148அ. (1) ஆளெவரும், அவரது சொந்தப் பாதுகாப்பை அல்லது வேறு எவரேனுமாளின் பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தும் வகையில் -

(i) புகையிரதப் பாதையின் வாயில் மூடப்பட்டுள்ளபோது;

(ii) புகையிரதப்பாதை சமிக்ஞை முறைமையைப் பொருட்படுத்தாது; அல்லது

(iii) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் பணிப்புகளுக்குக் கீழ்ப்படியாது,

புகையிரதப்பாதைக் கடவையின் மீது அல்லது அதற்குக் குறுக்காக மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது குற்றத்தீர்ப்பின்மேல், முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் மற்றும் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக அவரது சாரதி உரிமத்தை இடைநிறுத்தல் என்பவற்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல், நாற்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் மற்றும் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அவரது சாரதி உரிமத்தை இடைநிறுத்தல் என்பவற்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 152அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 152அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஓட்டும்போது செல்லிடத் தொலைபேசி முதலியவற்றின் பயன்பாட்டைத் தடைசெய்தல்.

152அ. (1) ஆளொருவர், வீதியொன்றின்மீது மோட்டார் வாகனமொன்றை ஓட்டும்போது, தொலைபேசியை, செல்லிடத் தொலைபேசியை அல்லது வேறு ஏதேனும் அசைவுள்ள தொலைத் தொடர்பு சாதனமொன்றைப் பயன்படுத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், 224 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், 215அ என்னும் பிரிவின்கீழ் உடனடியாக குற்றப் பணங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட தொகைக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 196 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 196 ஆம் பிரிவு, அதன் (5)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், 224ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 216 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 216 ஆம் பிரிவு, "மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும்" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய

இரண்டுக்கும் அத்துடன் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 216அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 216அ என்னும் பிரிவு, "நான்காயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்துக்கும் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் மற்றும் அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 216ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 216ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(அ) அதன் (அ) என்னும் பந்தியில், ''இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும்'' என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவுவரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, ''ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் அத்தகைய சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும்:-

"(ஆ) அவர்-

(i) எவரேனுமாளுக்கு காயம் விளைவிக்கின்றவிடத்து, முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்; அல்லது

(ii) எவரேனுமாளுக்கு பாரதூரமான ஊறு விளைவிக்கின்றவிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, "பத்தாயிரம்

ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது குற்றத்தீர்ப்பின்மேல், பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் மற்றும் அவரது சாரதி உரிமத்தை இடைநிறுத்தல் என்பவற்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல், இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுதல் என்பவற்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, ''பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது குற்றத்தீர்ப்பின்மேல், பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் மற்றும் ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமத்தை இடைநிறுத்தல் என்பவற்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 என்னும் பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

''காப்புறுதிச் சான்றிதழின்றி ஓட்டுவதற்கான தண்டம்.

**218.** பிரிவு 99 இன் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 என்னும் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவு, ''இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும்'' என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுமுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, ''இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது குற்றத்தீர்ப்பின்மேல், மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 10 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

“

| | *பிரிவு* | *ஏற்பாடு* |
|---|---|---|
| *10.* | *140 மற்றும் 141* | - வேக எல்லை ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை |
| | *141அ (1) (அ)* | - விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையை விஞ்சுதலும் இருபது நூற்றுவீதம் வரையிலும் |
| | *141அ (1) (ஆ)* | - விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் இருபது நூற்றுவீதத்துக்கு விஞ்சுதலாகவும் முப்பது நூற்றுவீதத்துக்குக் குறைவாகவும் |
| | *141அ (1) (இ)* | - விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் முப்பது நூற்றுவீதத்துக்கு விஞ்சுதலாகவும் ஐம்பது நூற்றுவீதத்துக்குக் குறைவாகவும் |
| | *141அ (1) (ஈ)* | - விதித்துரைக்கப்பட்ட வேக எல்லையின் ஐம்பது நூற்று வீதத்தை விஞ்சுதல். |

;”;

(2) அதன் 12 ஆம் விடயத்தை உடனடுத்து, 12 (அ) என்னும் விடயமாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

“

| | பிரிவு | ஏற்பாடு |
|---|---|---|
| 12அ. | 152அ | - செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல் |

;”.

**14**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.